**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.74/2021**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜுலை மாதம் 25 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாமுண்டிஸ்வரி | மதம் | : இந்து |
| க/பெ | : சசிகுமார் | ஜாதி | : -- |
| வயது | : 40 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : சிற்றூண்டி உணவகம் | வட்டம் | : திருத்தணி |

**25.07.2025**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 20.09.2019ம் தேதியிட்டு என் அப்பா எனக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மின் கட்டண அட்டைகள் (4 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். **(மின் கட்டண அட்டைகள் வா.சா.ஆ 2 வரிசை (4 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மின் கட்டண ரசீதுகள் (13 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். **(மின் கட்டண ரசீதுகள் வா.சா.ஆ 3 வரிசை (13 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வீட்டு வரி ரசீதுகள் (28 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். **(வீட்டு வரி ரசீதுகள் வா.சா.ஆ 4 வரிசை (28 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)